**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – சேலம் மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.C.குணசேகரன் என்பவரின் மனைவி திருமதி.அ.சத்யா, ஊர்நல அலுவலர் நிலை–2 / இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் செய்தது – பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ6) துறை**

அரசாணை (2D) எண். 43

நாள்:21.09.2021.
பிலவ ஆண்டு, புரட்டாசி 05
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
2. சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணை ந.க.எண்.33639/2019/நி3, நாள்:10.03.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண்.43037/2020/டி1, நாள்:05.04.2021 மற்றும் 30.07.2021.

*****

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதங்களில், சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராகப் பணிபுரிந்து 02.09.2019 அன்று பணியிடைக்காலமான திரு.C.குணசேகரன் என்பவரின் மனைவி திருமதி.அ.சத்யா என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறையின்படி கருணை அடிப்படையில், சேலம் மாவட்டத்தில் ஊர்நல அலுவலர் நிலை–2 / இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 11.03.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தனது கடிதத்தில், பணியிடைக் காலமான திரு.C.குணசேகரன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தனது தகுதிகாண் பருவத்தினை 06.01.2015 அன்று நிறைவு செய்துள்ளார். அவரது வாரிசுதாரரான அவரது மனைவி திருமதி.அ.சத்யா கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 12.11.2019 அன்று விண்ணப்பித்துள்ளார். தனியர்

திருமதி.அ.சத்யா 10.05.1988 அன்று பிறந்துள்ளார். மேலும் தனது இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (10-ம் வகுப்பு) March 2003 அன்று தேர்ச்சி பெற்றுள்ளார். தனியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்று ஒருங்கிணைந்த சான்றிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 31. தனியருக்கு பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், அவரது குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, ஊர்நல அலுவலர் நிலை-2 / இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.அ.சத்யா என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 11.03.2020 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அலுவல் சாரா எண்.15334/ட்டி-1/2021, நாள் 08.09.2021 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண்.28520/ஜி-1/2021-1, நாள் 14.09.2021-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

K.கோபால்
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18.
கருவூலங்கள் மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-35.
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், சேலம் மாவட்டம்.

**நகல்:**

திருமதி.அ.சத்யா, இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, சேலம் மாவட்டம்.
(**வழி**:மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் மாவட்டம்.)
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

**பிரிவு அலுவலர்.**

21-9-2021

Block Office Copy

மாவட்ட ஆட்சியரகம்,
(வளர்ச்சிப் பிரிவு),
சேலம்.

மே.எ.ந.க.எண்.33639/2019/நி3, நாள். 20.10.2021.

அரசாணை (2ப) எண்.43, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ6) துறை, நாள்.21.09.2021 அனுப்பப்படுகிறது.

3/4

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
சேலம்.

**பெறுதல்**

திருமதி.அ. சத்யா,
ஊர்நல அலுவலர் நிலை–2,
மேச்சேரி ஊராட்சி ஒன்றியம்.
(அலுவலக தலைமை மூலமாக)

20.10.2021

**நகல்:** வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), மேச்சேரி ஊராட்சி ஒன்றியம்,
(இரட்டைப் பிரதிகளில் சார்வு செய்து சார்வு நகல் அனுப்பும் பொருட்டு)

மேச்சேரி ஊராட்சி ஒன்றியம்
மே. எ. ந. க. எண் : 400/2021/அ1 நாள் : 22.10.2021

அரசாணை நகல் சார்வு செய்யப்படுகிறது

Block Development Officer (V.P)
MECHERI.

22.10.21

22.10.21

பெறுதல்
திருமதி. அ. சத்யா
ஊர்நல அலுவலர் - II
மேச்சேரி ஊராட்சி ஒன்றியம்

Received copy